# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதிவிசேஷமானது

අංක 1934/16 - 2015 සැප්තැම්බර් 30 වැනි බදාදා - 2015.09.30

***1934/16 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2015 ஆம் ஆண்டின் 159 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 4/3/4/2013/டீ/421.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : வீஎஸ்டபிள்யூ/டீஎஸ்/எல்பீ/ஏசீகியூ/பொலிஸ்.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் முனசிங்ஹ காரியவசம் அப்புஹாமிலாகே தொன் சோமதாச குணவர்தன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2015.09.25.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்.

2. **காணியின் விபரம்** : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 146 - பண்டத்தரிப்பு கிராம உத்தியோகத்தர் பிரிவில், பண்டத்தரிப்பு கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.05.06 ஆந் திகதிய வைஏ/எஸ்என்டீ/2014/27 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு ‘‘ஏ’’ எனக் காட்டப்பட்ட சுமார் 0.3163 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு “ஏ” - மாப்பாப்புலம் - விஸ்தீரணம் : சுமார் 0.3163 ஹெக்டயார்**

வடக்கு : பிரதேச சபை வீதி மற்றும் வீதி (வீ.அ.அ.) ; கிழக்கு : நவரத்தினம் நடராஜாவின் மனைவியான பரமேஸ்வரி உரிமை கோரும் மாப்பாப்புலம் ; தெற்கு : நவரத்தினம் நடராஜாவின் மனைவியான பரமேஸ்வரி உரிமை கோரும் மாப்பாப்புலம் மற்றும் எட்வட் நவரத்தினம் மற்றும் சிலர் உரிமை கோரும் மாப்பாப்புலம் ; மேற்கு : எட்வட் நவரத்தினம் மற்றும் சிலர் உரிமை கோரும் மாப்பாப்புலம் மற்றும் பிரதேச சபை வீதி.

10 - 574